Reg. No. M. 2997.

தனிப்பிரதி அணா 1

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

ஆசிரியர்:
யாழ்ப்பாணம்
தென்கோவை
ச. கந்தைய பிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

Bureau de la Direction:—
RUE D'AMBALATADOU AYER
MADAM NO. 4, Pondichery.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. குறள்.

காரியாலயம்: —
அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி
நெ. 4, புதுவை.

VOL. I. { புதுவை, பவ-ஹு ஆடி-மீ - உரு உ (9—8—34) } No. 37.

தேவாரம்

கறுத்த நஞ்சமுண்டிருண்டகண்டர்காலனின்னுயிர்
மறுத்தமாணிதன்றனகம் வண்மை செய்தமைந்தனூர்
வெறித்துமேதியோடி மூசுவள்ளை வெள்ளை நீள்கோடி
யறுத்தமண்டியாவிபாயுமந்தணூரரென்பதே.

மாணிதன்னுயிர் மதித்துணவந்தவக்காலனையுதை செய்தார்
பேணியுள்கு மெய்யடியவர் பெருந்துயர்ப் பிணக்கறுத்தருள் செய்வார்
வேணிவெண்பிறையுடையவர் வியன்புகழ்ச்சிரபுரத்தமர்கின்ற
வாணிப்பொன்னினை யடிதொழு மடியவர்க்கருவினையடையாவே.

ஏத நன்னில மீரறுவேலியேயர் கோனுற்ற விரும்பிணிதவிர்த்துக்
கோதனங்களின் பால்கறந்தாட்டக் கோலவெண்மணற்சிவன்றன் மேற்சென்ற
தாதை தாளறவெறிந்ததண்டிக்குன் சடைமிசை மலரருள் செயக்கண்டு
பூதவாளிநின் பொன்னடியடைந்தேன் பூம்பொழிற்றிருப்புன் கூருளானே.

உ

திருவருள் துணை

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே.

(திருவாசகம்)

வித்தகம்

புதுவை,

பவ-ஞு ஆடி-மீ 25உ

பாசுபதம்

உண்மை நிலை அடையும் பக்குவ சிவர்கள் குருவருளால் அறிந்து அநுட்டித்துப் படியேற்றம் பெற்று வியாபகமாகிய மாயையைக் கடந்து வியாப்பியாகிய பதியுடன் ஒன்றிச் சிவாக்மமாதற்குச் சோபான மாய் அமைந்த புறச் சமயம் அகச்சமயம் என்பனவற்றுள் அகச் சமயங்களுள் ஒன்றுகி மிளிர்வது பாசு பதம் என்பது.பாஞ்சராத்திரம் பாட்டாசாரியம் மீமாம்சை சமணம் பௌத்தம் லோகாயதம் என்பன புறச்சமயங்கள் எனவும், வைரவம் வாமம் மாவிரதம் காளாமுகம் பாசுபதம் சைவம் என்பன அகச்சமயங்கள் எனவும் வகுத்தனர் தத்துவப் பெரியாராகிய வித்தகர். புறச்சமயம் எனப்பட்டனவே வியாபகமாகிய விஷ்ணு சமயம் — வைஷ்ணவம் ஆம். இவ் விஷ்ணு சமயமே ஆதி. எதற்கு ஆதி? எனின், கீழிருந்து மேலேறுவதற்கு ஆதி என்பது.இவைதாம் ஆறுபடிகள் அமைந்த ஏறணி—ஆறு தத்துவங்கள் —அங்கங்கள்—ஆதாரங்கள் — வரைகள் என்க. இவை சத்தி பாகம் எனப்படும். இவற்றின் உண்மைகளைக் குருமுகமாக அறிதல் வேண்டும்.

"அறுசமய நீதி ஒன்றும் அறியாமல்"

(திருப்புகழ்)

என்றார் இவற்றை அறியுமாறு அவாவி இவற்றின் உண்மைகளைக் குரு முகமாக அறிந்து படியேற்றம் பெற்று உய்தியடைந்த வித்தகராகிய அருணைகிரிநாதர். இவை வியாபகமாகிய பிரபஞ்ச வடிவமே விண்டு வடிவமே என்பது,

"இருமுச் சமயத் தொருபேய்த்தேரினை"

(திருவாசகம்—திருவண்டப்பகுதி)

என மணிவாசகர் அருளியதனுல் நன்று வலியுறுதல் கண்டு கொள்க. இவை எம்பெருமான் வியாபக வடிவமே என்பது,

"............தொண்டர்க் கங்கங்கே அறு
[சமயமாகின்ற
திக்கினை என் திருமுதுகுன்றுடையான்
[தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்தவாறே."

(அப்பர் தேவாரம் திருமுதுகுன்றம்—
திருத்தாண்டகம் செ. 5)

என்னும் அப்பர் திருவாக்கால் நன்கு புலப்படும். பக்குவ சீவன் இவற்றின் உண்மைகளைக் குருவருளால் அறிந்து பாடுபட்டு இவற்றைக்கடந்து அப்பால் அகச் சமயங்களாகிய மேற் படிகளை அடைய வேண்டும். அகச் சமயங்கள் சிவபாகம் எனப்படும். சத்தி வேறு சிவம் வேறன்று. விஷ்ணு வேறு சிவம் வேறன்று. ஒன்றே வியாப்பியமும் வியாபகமாய் நிற்கின்றதென்பது வெள்ளிடை. ஆதலால் சிவம் வேறு விஷ்ணு வேறு என உயர்வு தாழ்வு கற்பித்தல் பாதகமாம் என்க.

"...
மண்ணினையுண்டமாயன் தன்னையோர்
[பாகம் கொண்டார்"

"...
அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாற
[னார்க்கே"

(அப்பர் தேவாரம்)

என்னும் சுருதிகளும் வியாபகமாகிய விஷ்ணு வடிவம் சிவாம்சமே என்பதனை நன்று வலியுறுத்துகின்றன. விரிப்பிற் பெருகும்.

அகச் சமயங்களுள் ஏகாதசமாய் விளங்குவது பாசு பதம். இதற்கு அடுத்தபடியே சைவம் என்பது—சிவ சம்பந்தமான நிலை என்பது. இதனுல் பாசு பத மாண்பு நன்கு புலப்படும். இப்படிகளை மனோதர்மத்தால் அடைய முடியாதோ? என்றுல், அது முயற்கொம்பே யாகும். கீழ்ப்படிகளைத் தாண்டாமல் மேற்படிகளை அடைய முடியாது. பாசு பதம் சித்திக்காமல் சைவம் நிகழ்வது—சிவ சம்பந்தம் பெறுவது — சைவராவது முடியாத காரியமே யாகும்.பாசு பதப் படியைத் தாண்டுவதே மிகக் கடினமான அத்தியாயம். ஊனம் நீங்கி—சவசம்பந்தம் நீங்கி சிவசம்பந்தம் பெறுவது என்றுல்—சைவம் நிகழ்வது என்றுல் எளிதின் முடியுமா? ஆதலால் பாசு பத மாண்பு ஈண்டு ஒரு சிறிது கூறப்படுகின்றது.

பாசு பதம் என்றுல் என்னை? எனின், சிறிது கூறுதும். பாசு என்பது மாசு என்னும் பொருளுடையது. மாசு குற்றம் அழுக்கு மலம் என்பன ஒன்றே. பதம் என்பது பக்குவம் எனப்படும். பதம் செய்தல் பக்குவப்படுத்தல்—பாகம் செய்தல்—பரிசுத்தீகரணித்தல்—சுழைத்தல் எனப்படும். எனவே பாசு என்னும் மாசு

மாசு என்னும் மலம் பதப்படுதலே—பக்குவப்படுதலே — பரிபாக முறுதலே பாசுபதம் எனப்படும் என்பது. மலம் பரிபாக மானாலன்றி — மலபரிபாகம் கைவரப் பெற்றாலன்றி—மலம் விமல மானாலன்றி அம்மலம் அமலமாதல் — உடல் ஊனம் நீங்கி ஒளிமயமாதல் — சிவ சம்பந்தம் பெறுதல்—சைவம் திகழ்தல் முடியாத காரியமே. மற்றோ, அவசம்பந்தமாகிய சவ சம்பந்தமே கைகூடும்—பிறவி நெறியே உளதாகும் என்க. மலம் விமலமாதலே—பரிபாக முறுதலே முதற்படி—அமல முதற்படி — முத்திக்கு வாசற்படி. "ஊசலாட்டும் இவ் உடலுயிராயின இருவினை" (திருவாசகம்) சமம் பெற்றஞான்றே மல பரி பாகம் உளதாகும். அப்பால் உளதாவது சத்தி நிபாதம். என்பு உள் உருகுவதே இருவினையின் ஈடு அழியும் மார்க்கம். அஃதாவது இருவினையின் ஏற்ற இறக்கம் விடுபட்டு அவை சமப்படுதற்கு உரிய மார்க்கம் என அருளியது மணிவாசக சிவம். (திருவாசகம் குலாப்பத்து செ.3.) இருவினை ஒப்பு மலபரிபாகம் சத்தி நிபாதம் இன்னவை என அறியாது மனப்பான்மையால் சாத்திரம் பல பேசிச் சாதலடைந்ததும் அடைவதுமே உலகியலாயிற்று. மூன்னிலைகளை நிறைகண்டு பஞ்சீகரணித்தலாகிய அருந்தல் பொருந்தல்களால் இருவினை ஒப்புக் கைகூடுவது என்றால் எளிதன்று. அதன்மேல் மல பரிபாகமோ எனின், அதன் பெற்றி யாரே கூறவல்லார்? அதன் மேல் சத்தி பாதம் பதிவது என்றால் அம்மம்ம! அரிது! அரிது! மா அரிது! அடையும் துன்பங்களுக்கு அளவுண்டோ? சத்திபாதம் எவ்வளவு நிறை பதிய வேண்டுமோ அவ்வளவு நிறை பதியப் பெற்றாலன்றிச் சுகம் என்பது சொப்பனத்திலும் உண்டோ? சுகமின்று எனினும் துன்பத்துக்கு அளவுண்டோ? இல்லை. இல்லை. திருவருளே அதனை அறியும். சுடலையாடி ஆடினதை ஆடினவனே அறிவனன்றி வேறு யார் அறிவார்? பிக்ஷாடனம் என்பது பொய்க்குமா? சூலம் தாங்கிய சிவம் பிக்ஷாடனனாய்ச் சுடலையாடியபின் பெம்மானாய் அரசு புரிவன் என்பதனை உலகமாக்கள் கதை எனக்கண்டனரேயன்றி வாய்மை இன்னது என அறிவரோ? அறியத்தான் முடியுமோ? நெருப்பாற்றை மயிர்ப் பாலத்தால் கடத்தல் எனப்படும் பஞ்சம ஆகுதியால் இரு மலங்களையும் அஃதாவது மண்ணையும் தண்ணீரையும் (பூ நீர்) சமப் படுத்துவதென்பது வாய்ப் பேச்சேயன்றி வினையில் எழுவதென்றால் அம்மம்ம! மாகடினம். நிலத்தையும் நீரையும் (பூநீர்) சமப்படுத்த வேண்டும் என்னும் வேத உண்மையை "துவாதச வாசற்படிகள்" (Douze Portes) என்னும் பிரான்சு (French) நூலில் ஜி. றிப்பிளி (G. Riply) என்னும் மேதாவியும் வற்புறுத்துக் கூறுகின்றார். பின் வருவது அதன் மொழிப்புரையாகும்.

அது, "ஒருவனும் ஒருத்தியும்
"உண்மைக் காதலோடு கூடி என்
" ஞான்றும் அவச்சலனம் இன்றி
" நித்தியத்துவம் பெற்று உபசாந்தத்
" தோடு வாழ வேண்டுமாயின், நிலத்
" தையும் நீரையும் சமப்படுத்தினா
" லன்றி வேறு உபாயத்தால் முடி
" யாது. நிலமும் நீரும் ஆகாயதத்து
" வத்தைப் பெறின், அஃதாவது
" அவ் இரு பூதங்களிலும் ஆகாயதத்
" துவம் பெரும்பாகம் பெறின், இருள்
" (அஞ்ஞானம்) இரியும். உதயம் லயம்
" (வியாபக வியாப்பியம்) என்னும்
" இவ் இரண்டன் மத்தியில் வெளிச்
" சம் உண்டாகும் — விளக்கம் உண்
" டாகும்" என்பது.

இப்பெற்றி கைகூடப் பெற்றவரே சதுரப்பாழுடையவர்—சதுரப்பாடுடையவர்—சதுரம் என்னும் நான்கு பாழ் உடையவர்—சதுரர் சதுரராகிய வித்தகர் என அறிக. நான்கையும் பாழ் செய்தவர்—பாழ் ஏற்றினவர்—நான்கையும் சமஞ் செய்தவர் இவரே என்க. சமஞ் செய்தல் எவ்வாறு? எனின், பூவும் நீரும் ஒருபுறம்; காலும் வானும் ஒருபுறம்; இந்நான்கும் சமம் பெற்று நடு அரசாகி விளங்கும் விளக்கம் எனும் உஷ்ணம்—தேயு கெதி பெறவேண்டும் அஃதாவது பொலிவு பெறவேண்டும் என்க. சிவசமயம் என்னும் தேயு சமயம் பெறுதல்—அமல அக்கினியாகிய சிவம் அணு அணுவாகக் கதி பெறுதல்—தலைமை பெறுதல்—அளவு பெறுதல் இதுவே என்க. அமல நிறை ஆக்க முறுதல் இதுவே என்க. இவரே சிவசம்பந்தமுடையவர்—சைவர் எனப்படுதற்கு உரியவர் என்க. இவ்வாறு பூவும் நீரும் ஒரு புறமாகவும், காலும் வானும் ஒரு புறமாகவும் சமம் பெறுதலே இருவினையின் ஈடு அழிந்து அவை சமம் பெறுதல் என்பது—இருவினை ஒப்பு என்பது என அறிக. ஊசலாட்டும் இவ் உடல் உயிராயின இருவினையும் கெட்டுத் திரிதல் என்பது. உடலுயிராய்த்தோன்றிய வினைவித்துக் கெட்டுத்திரிதல் என்பது-அமலம் அங்குரம் பெற்று விளைவதென்பது என அறிக. இவ்வாறு இருவினை ஒப்பு ஏற்பட்ட போது தான் மலபரிபாகம் சித்திக்கப் பெறும். மல பரி பாகம் என்றால் என்னை? அதுதான் மலம் பரிபாகமடைதல்—பாசு பதமாதல் — பாசுபதம் என்பது. மலம் துப்பு நீங்கி விமலமாவது என்பது. மலம் என்றால் என்னை? அதுதான் செம்பிற் களிம்பு போலச் சரீரத்தோடு — உடலுயிரோடு அபேதமாய் — சகசமாய் — அசுத்த நிறையாய் உள்ள அழுக்கு எனப்படுவது—துப்பு எனப்படுவது. பின்வரும் பிரபல சுருதி இவ்வுண்மையை நன்கு புலப்படுத்துகின்றது.

ஸாமவேத மஹோபநிஷத்

தண்டுலஸ்ய யதாசர்ம யதாதாம் ரஸ்ய காளிமா |
ஜீவஸ்ய தண்டுலஸ்யேவ மலம் ஸஹஜ மப்யலம் ||

நெல்லிற்கு உமியும் செம்பிற்குக் களிம்பும் சகசமாய் என்றும் உள்ளன

போலவே உடலுயிருக்கும் (சீவன்) மலமாகிய அழுக்கு சகசமாய் உள்ளது என்பது இதன் பொருளாகும்.

சரீரத்துள்ள ஒன்பது ஓட்டைகளாலும் மயிர்க்கால்களாலும் ஒழுகுவது மலம்—மலமாகிய அழுக்கு. இவ் அழுக்காகிய மலம் விமலமடைவதே பாசு பதம் என்பது. இவ் அழுக்குத் துப்பு நீங்கி—அசுத்தம் நீங்கி உறவுபடுவதே துப்புறவு—துப்புரவு என்பது. இதற்கு ஏற்ற ஒழுக்கமே—குருநெறியே—சாதகமே பாசு பத விரதம் என்பது; வாய்மையான தவம் என்பது. இவ் அழுக்காகிய அசுத்தம் சுத்தத்திற் கலந்து பிரிபடாமல் சகசமாய் இருக்கிறது. ஏற்ற சாதகங்களால் இவற்றைச் சமப்படுத்த வேண்டும். இவ் அழுக்காகிய மலம் விமலமானபோது — வாய்மையான துப்புரவு ஏற்பட்டபோது பூ மணம் கமழும், சிவ மணம் கமழும். சிவசம்பந்தம் பெற்றமைக்கு அறிகுறி இதுவே. அஞ்ஞான்று சந்தனாதிகளப கஸ்தூரிகளால்—வாசனைத் திரவியங்களால் நம்மை அழகு படுத்தவேண்டி அழுக்கை மறைக்க வேண்டியதில்லை. இதுவே இயற்கை மணம்—விமல பௌதிக மணம். இதுவே சாந்தம். இதுவே சுண்ணம். இதுவே சாம்பல்; அசுத்த பௌதிகம் நீறின சாம்பல் என்க. இதுவே எம்பெருமான் அணியும் "சுண்ண வெண் சந்தனச்சாந்து"; (அப்பர் தேவாரம்) "சுண்ணப்பொடிச் சாந்தம். சுடு நீறு" (சம்பந்தர் தேவாரம்) அசுத்த பௌதிகங்கள் அசுத்தம் நீங்கிச் சுண்ணமான இடம் இதுவே. இதுவே திரு நீறு — வாய்மையான விபூதி. இதுவே பெருஞ் செல்வம் அளிப்பது — நித்தியத்துவம் அளிப்பது என அறிக. இத்தகைய அரிய பெரிய திருநீறே திரு ஆலவாயான் திரு நீறு; சகல வல்லபமும் அளிப்பது. பின் வரும் திருவாக்குக்கு இலக்காயது இதுவே என அறிக.

ஞானசம்பந்தர் தேவாரம்.

மந்திரமாவது நீறு வானவர்மேலது நீறு
சுந்திரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன்திரு வாலவா
[யான்திரு நீறே.

எயிலதுவட்டது நீறு விருமைக்குமுள்ளது
[நீறு
பயிலப்படுவது நீறு பாக்கியமாவது நீறு
துயிலைத்தடுப்பது நீறு சுத்தமதாவது நீறு
வயிலைப்பொலிதருசூலத் தாலவாயான்
[திரு நீறே.

(ஷை திருநீற்றுப்பதிகம்—பண் காந்தாரம் செ. 1—7,)

திருவாசகம்

"முன்னீறு மாதியு மில்லான் முனிவர்
[குழாம்
பன்னூறு கோடி யிமையோர்கள் தாம்
[நிற்பத்
தன் நீறு எனக்கருளி..............."

(ஷை. திருப்பொன்னூசல் செ. 3.)

என மணிவாசகர் விதந்து கூறியருளியதும் இத்திரு நீறே என அறிதற்பாற்று.

உலகத்தில் வைத்தியர்களும் மல சலங்களைப் பரீட்சித்தால் சரீர நிலைமையை அறிந்து கொள்வர். மல சலங்களால் சரீர நிலைமை புலப்படும். இவை விமலமடையாது அழுக்கு மலிந்து இருப்பதனாற்றான் பிணிகள் உளவாகின்றன. பிணி மூப்புச் சாக்காடுகள் உளவாகின்றன—உண்ணும் உணவும் அருந்தும் நீரும் மல சலமும் சம நிறை கொள்ளவேண்டும்; கொண்டால் ஆயுட் பெருக்கம் உண்டு என்ப. மலம் விமலமானால் பிணி மூப்புச் சாக்காடு நீங்கும்; உடலுயிர் மாற்ற மடைதலாகிய துவிசத்துவம் உளதாகும்; நித்தியத்துவம் உளதாகும். இது தான் முத்தி வாயில் என்பது சொல்லாமலே அமையும். உரிய சாதகங்களால் மலம் விமலமாதல் கைகூடிப் பூ மணம் போலும் சிவமணம் கமழ்ந்த உண்மையையே பின் வரும் திருவாக்கால் வற்புறுத்தி யருளியது மணிவாசக சிவம்.

திருவாசகம்

"..............................
பூவில் நாற்றம் போன்றுயர்ந் தெங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை
இன்றெனக் கெளிவந் தருளி
அழிதரும் ஆக்கை யொழியச் செய்த
[வொண்பொருள்
இன்றெனக் கெளிவந்திருந்தனன் போற்றி
அளிதரும் ஆக்கை செய்தோன்போற்றி
ஊற்றிருந் துள்ளங் களிப்போன் போற்றி
....
கடக்களி றேற்றாத் தடப்பெரு மதத்தின்
ஆற்றே னாக அவயவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தனன்."

(ஷை. திருவண்டப் பகுதி.)

"பூவின்கள்வாசனைமலைநிலநீர் தீ வளி
[ஆகாசமாம் ஈசனை."

என்றார் நமது அப்பர். (திரு ஏகம்பம் பண் காந்தாரம் செ. 6.)

"கந்தமலரிற் கலக்கின்ற நந்தியை"

என்றனர் திருமூலர். (திருமந்திரம் 8-ம் தந். அவா அறுத்தல் செ. 10.)

மலம் விமலமாகப் பெற்றோர்க்குத் தன்னிலை முன்னிலைகளாகிய எவ்விடத்தும் நன் மணமே—சிவமணமே கமழும்; சவமணம் கமழாது.

பட்டினத்தடிகள் புலம்பல்

ஆர்ந்தவிடமத்தனையு மருளாயிருக்குதடி
சார்ந்தவிடமெல்லாஞ் சவ்வாது
மணக்குதடி-

பொற்பூவும் வாசனைபோற் போதம்
[பிறந்தார்க்குக்
கற்பூவும் வாசனைபோற் காணுக்கயவருக்கு.

இப்பெற்றி கைவருதற் கேற்ற இல்லற ஒழுக்கத்திற்குரிய விவாகம் "மன்றல்" எனவும் "மணம்" எனவும் உபசரிக்கப்பட்டதன் உண்மையையும் ஓர்ந்துணர்க

இவ்வாறு மலம் விமலமானபோது அமல அக்கினியாகிய—அமல ஒளியாகிய சிவம் ஆக்கமுறும் பெற்றி—

நமது மெய்யகத்தில் குடி கொள்ளும் பெற்றி இதுவே என அறிக.

"மணங்கமழ் தெய்வத்து இளநலம்"
(திருமுருகாற்றுப்படை.)

என்னும் பண்டைக் சைவமுத்தி நெறி இதுவே என்பது சொல்லாமலே அமையும். கந்தழி எனப்படுவது இதுவே என்க. அசுத்தமாகிய மலம் —அசுத்த பௌதிகம் விமல மடைபவே அசுத்த உணர்ச்சியாகிய— அசுத்த காம உணர்ச்சியாகிய கந்து அழியும் அஃதாவது வடு நீங்கிச் சிறக்கும் — சுத்தமடையும் — சிவமாகும் என்பது. இப்பெற்றி கைவரப் பெறுதற்குக் குருவருளால் அநுட்டிக்கப்படும் அரிய பெரிய சாதகமே பாசு பத விரதம் என்பது. விரதங்களுள்ளே தலையாயது இது. இதுவே "சிரோ விரதம்" எனவும், "விரஜா தீட்சை" எனவும், "மந்திர சமஸ்கார தீட்சை" எனவும், சுருதிகளால் கூறப்படுவது. விரஜா நதி என்றால் பரம பதத்துக்கு இப்பால் உள்ள நதி என்பர். கடக்கப்பட வேண்டியது இதுவே. வைதரணி என்பது இதுவே. இதுவே நெருப்பாறு. இதனைக் கடத்தற்குரிய திட்சையே "விரஜா திட்சை" எனக் கூறற்பாற்று. ஆகமங்களில் "ம்ருத தீட்சை" எனப்பட்டதும் இதுவே. அஃதாவது அசுத்த தநுக்கள் "ம்ருதம்" அடைந்து —செத்து—நீறி மாறும் இடம் இதுவே என்க. அப்பொழுதுதான் உடலில் சிவம் குடி புகும்—சிவோகம் தலைப்படும் என்க.

"..............................
முன்புள்ள வற்றை முழுதழிய வுள்புகுந்த
அன்பின் குலாத்தில்லை யாண்டானைக்
[கொண்டன்றே"

என்றது மாணிக்கம் (திருவாசகம் குலாப்பத்து செ. 3.)

'விந்து அடங்க விளையும் சிவோகமே"

என்றனர் திருமூலர் (திருமந்திரம் விந்து ஜயம் போகசரவோட்டம் செ. 33.) வைதரணி கடந்தே மோட்ச வாசலை—சிவபரம்பொருளை அடைய வேண்டும் என்னும் கற்பனையின் உண்மைப்பொருள் இதுவே என அறிக. உருத்திரனை — சிவனை—சிவபரம்பொருளை அடையச் செய்வது இத்தகைய பாசு பத விரதமே. பின் வரும் பிரமாணங்கள் இவ் அரிய பெரிய பாசு பத விரத மாண்பினை நன்கு புலப்படுத்துதல் கண்டு கொள்க.

அதர்வசிகோபநிஷத்

ருத்ரம் சாஸ்வதம் வை புராணம்
இஷம் ஊர்ஜம் தபஸாநியச்
சதி வ்ரதம் ஏதத் பாசுபதம்.

(இ—ள்) நித்தியனும் பழையவனும் அன்னமானவனும் சர்வ வல்லபமுடையவனும் ஆகிய உருத்திரனை (ஒருவன்) தவத்தினால் அறிகின்றான் (அடைகின்றான்) அதற்குரிய விரதமே (தவமே) பாசு பதம் என்பது.

கூர்ம புராணம்

நிர்மிதம் ஹி மயா பூர்வம் ச்ரௌதம் பாசு
[பதம் சுபம் |
குஹ்யாத் குஹ்யதமம் ஸூக்ஷ்மம் வேத
ஸாரம் விமுக்தயே ||

(இ-ள்) வேதசாரமாயுள்ளதும் மறை பொருளுள்ளும் மறை பொருளாயுள்ளதும் நுண்மையானதும் ச்ரௌதம் எனப்படுவதும் மங்களகரமானதுமாகிய பாசு பதம் என்பது (பக்குவசீவர்கள் அநுட்டித்து) வீடடைதற் பொருட்டு முன்னே என்னால் நிச்சயமாக விதிக்கப்பட்டது என்பது.

"ச்ரோதம்" என்றால் என்னை? ச்ரௌதம் சுரோதம் என்பன ஒன்றே. ஆகாயத்தை—வெளியை—அகண்டாகார லலாடத்தை இடமாகக் கொண்டவன் சுரோதா என்ப. பிரதித்தொனி ரூப சத்தத்தின் கண்ணே விசேஷமாய் விளக்கத்தையுடைய சுரோதா புருஷனுக்கு ஆகாசம் இடமாம் என்பது பிருகதாரண்யஉபநிஷத். ஆகாச தத்துவத்தை அங்கமாகக் கொண்ட — இடமாகக் கொண்ட தொனி ரூப சப்தம் (நாதம் —ஒலி) "ச்ரோதம்" எனப்பட்டதென்பது வெள்ளிடை. நாதம் ச்ரௌதம் எனப்பட்டால் நாதம் என்னும் ஒலியாகிய இயக்கத்துக்குப் பிறப்பிடமான விந்து "அச்ரௌதம்" (அசிரௌதம்) எனப்படும் என்பது சொல்லாமலே அமையும் அல்லவா? ச்ரௌதம் பிராணனை ஆசிரயித்தது என்பதும் அச்ரௌதம் அபானனை ஆசிரயித்தது என்பதும் உண்மையிலும் உண்மையல்லவா?—வெள்ளிடை அல்லவா? ஆகவே அபானன் சுத்தமடையாமல் பிராணன் சுத்தமடைய முடியாது என்பதும் வெள்ளிடை அல்லவா? ஆனால் பாசு பதம் அசிரோத பாசு பதம் சிரோத பாசு பதம் என இருவகைப்படும் எனவும் அசிரௌத பாசு பதம் மோஹனார்த்தமும் வேத பாஹ்யமுமாம் எனவும் பாடிய கர்த்தாக்கள்சிலர் தீர்ப்புக்கூறிவிட்டனரே! எனின், வேத கர்த்தா மூடர் எனப்பட ஆமோ? அன்று! அன்று! மற்றே, அவ்வேதத்தின் உட்பொருளை ஒருசிறிதும் அறியும் ஆற்றலின்றித் தமது வித்தியா சாமர்த்தியத்தாலும் தற்போதத்தாலும் மனம் போனவாறு கண்டு பிடித்தனவற்றை எல்லாம் "இது வேத சம்மதம்" "இது வேத பாஹ்யம்" "இதுகொள்ளற்பாலது" "இது விள்ளற்பாலது" என்றும், தங்கள் மூளைக்கு எட்டாதனவற்றை அசத்தம் — அசம்பாவிதம் என்றும் துணிந்தவரே — துணிந்தவற்றை வெட்கம் — லஜ்ஜையின்றி வெளியிட்டவரே மூடர் எனப்பட ஆம் என்றே எமது சிற்றறிவு கொண்டு துணிய வேண்டியதாகின்றது. சிலர் காளாமுகம் காபாலம் என்பனவற்றை அவைதிக மதங்கள் என்கின்றனர் ஆம். கரும்பின் சக்கையை மென்று விழுங்கிவிட்டு அதன் சாரத்தை உமிழ்ந்து விட்டவர் இவர் என்பதில் ஐயமுண்டோ? இல்லை இல்லை. இவற்றின் உண்மைகளை அறியாதவர் தாமா முத்தி நிலையை அறியவல்லார்? ஒவ்

வோருயுகத்துக்கும் ஒவ்வொரு வேதம் ஆகமம் எனக்கூறி அமையும் மூலைகளும் உண்டே. தமது அறியாமையைப் பிறர் ஒப்புக்கொள்ளார் என நினைந்து கட்டுக்கதைகள் பலவற்றைச் சான்று காட்டுகின்றார் இவர். இவர்தம் உக்கிரமான—முட்டைத்தனமான முடிபை நடுநிலைமை வகித்த அறிஞர் ஒப்புக்கொள்ளார் — இலக்ஷியமாகக் கொள்ளார் என்பது திண்ணம். சேற்றிலன்றி வேறு யாண்டும் பங்கஜம் விளைவேற முடியாது என்பது பட்டாங்கு அல்லவா? சத்தியம் அல்லவா? அசிரௌத பாசு பதம் காமார்த்தம் எனவும் அவைதிகம் எனவும் கூறுவோர் சேற்றிலன்றிப் பிறவாறு பங்கஜம் விளைவேறாது— விளைவேற முடியாது என்பதனை அறியாதது என்னை? அவைதிகம் எனப்படும் பாசு என்னும் சேறு பக்குவப்படுதல்—பதஞ் செய்தல் என்புழி வைதிகம் யாண்டுளதோ? வைதிகம் என்றால் சுத்தம் அல்லவா? பாசு பதமான பின் வைதிகம் நிலவும் ஆம் அன்றி அதன் முன் ஆம் எனக் கூற இடம் உண்டோ? ஆதலால் அவைதிகமே அடிப்படை என்பது வெள்ளிடை. அதன் அநுட்டானத்தாலன்றி வேறு எவ்வாற்றானும்—எவ் உபாயத்தானும் வைதிகம் பெறற்பாலதன்று என்பது மலையிலக்கு அல்லவா? ஆதலால் அசிரௌத பாசு பத சித்தியின் ஈறே சிரௌத பாசு பதம் எனக் கொள்ளற்பாற்று என்பது தடக்கை நெல்லி என விளக்கம் பெறுதல் கண்டு கொள்க. இவ்வுண்மைகளை அறியும் ஆற்றலும் காதலும் இல்லாத எம் போலியர் சிலர் அசிரௌத பாசு பதம் காமார்த்தம் எனவும் வேதபாஹ்யம் எனவும் தமது முட்டை மதியால் முடிபுசெய்து தாமும் வைதிகம் நிலவப் பெறாது மாண்டு பிறவி வலைப்பட்டனர் என்பதே வெள்ளிடையாயிற்று. இவ்வாறே சித்தர் நூல்களை அறியும் ஆற்றலும் காதலும் இல்லாத வேறு சிலர் அந்நூல்கள் "பெண்போகம் முக்கியம் எனக் கூறுகின்றமையால் அவை பயன்தரமாட்டா; அவை எங்கள் நூதன சைவத்துக்கு விரோதம்" என்பன போலச் சில பல கூறி அத்திருமறைகளையும் அவற்றை அருளிய சிவகாருண்ணிய மூர்த்திகளாகிய தத்துவப் பெரியாரையும் ஏளனஞ்செய்து பிரமசாரி எனக் கூறிக்கொண்டு கௌபீனத்தைச் சிக்கென யாத்துக் கொண்டு இருந்தாற்றான் முத்தி சித்திக்கும் எனத் தமது வித்தியா சாமர்த்தியத்தாலும் தற்போத முதிர்ச்சியாலும் சித்தாந்தஞ் செய்து மாண்டு பிறவி வலைப்படுவாராயினர். இவர் கூறியனவற்றையே வேத உண்மை என நம்பியோர் உண்மை இன்னது என அறிய முடியாதவராய் அவ்வுண்மைக்கு மாறாக விதண்டை பேசிப் போராடி மாண்டு போக வேண்டியவராயினர்.

சிரௌதம் அசிரௌதம் என்பனவற்றால் ஆசிரயிக்கப்பட்ட பிராணன் அபானன் என்பன உரிய சாதகங்களால் வடுநீங்கிச் சிறந்துழி, நடுவணதாகிய கந்து என்னும் உணர்ச்சி வடிவான வாயுவும் வடுநீங்கிச் சிறந்து—குற்றம் தகர்ந்து—பாசு என்னும் மாசு நீங்கிச் சுத்தமடைந்து பிராணன் அபானன் என்னும் அவ்விரண்டையும் இருபுறமும் அணைத்துக் கொண்டு மிளிரும். அஞ்ஞான்று இம்மூன்றும் தெய்விகம் வாய்ந்தன எனப் போற்றப்படும். இவ்வுண்மையே பின் வரும் தொல்காப்பியச் சூத்திரத்தால் விளக்கப்பட்டது.

தொல்காப்பியம்

பொருளதிகாரம் புறத்திணையியல்
சூத்திரம் 88.

கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே.

(இ—ள்) வடு நீங்கு சிறப்பின் முதலன (உரிய சாதகங்களால்) பாசு என்னும் மாசு நீங்கிச் சிறக்கப்பெற்றமையால் முதன்மையுடையனவாய, கொடிநிலை கந்தழி வள்ளி என்ற மூன்றும்—கொடிநிலை கந்தழி வள்ளி என விதந்து கூறப்பட்ட மூன்றும், கடவுள் வாழ்த்தோடு கண்ணியவரும்—கடவுள் வாழ்த்துடன் ஒருங்கு கருதும்படி அமையும் என்பது.

கொடிநிலை ஒருபுறம். வள்ளி மற்றொரு புறம். கந்து நடு. கொடி மேலேறும் இயல்புடையது. இதுவே பிராணன்—பிராணவாயு என்க. வள்ளி கீழ் நோக்கும் இயல்புடையது. கிழங்கு வகைகளுள் ஒன்றை வள்ளி என்பர். அக்கிழங்கு பூமிக்குட் கீழ் நோக்கிச் செல்லும். இதுவே அபானன்—அபான வாயு என்க. கொடிக்கும் வள்ளிக்கும் நடுவில் இருந்து அஃதாவது பிராணன் அபானன் என்னும் இரண்டற்கும் இடையில் இருந்து இயங்குவதும் மேல் கீழ் என்னும் அவை இரண்டையும் இயக்குவதும் கந்து என்னும் மறையாம். அக்கந்து என்னும் மறை அதிக மாத்திரையுடைய ஆரோகண அவரோகண அசைவினின்றும் திரிந்து நிறையைத் தழுவி நிறையுட் புகுந்துழிக் "கந்து அழிந்தது" எனப்படும். "கந்தழி" என விதந்து கூறப்படுவது இதுவே என அறிதற்பாற்று. அஞ்ஞான்று கொடிநிலை வள்ளி என்பன இரண்டும் தம் தம் குற்றம் என்னும் "வடு" நீங்கிச் சிறப்புற்று முதன்மைபெறும். ஆதலால் "வடு நீங்கு சிறப்பின் முதலன மூன்றும்" என்றார்.

மதத்திற் சிறந்தது யானை. இது தேயு அம்சம்—தெய்வயானை. "கடக்களிறேற்றாத் தடப் பெருமதம்" (திருவாசகம் திருவண்டப்பகுதி) என்றார் இப்பெற்றி கைவரப்பெற்ற மணிவாசகர். "தேவயானை" எனவும் "தேவப்பூ" எனவும் (திருப்புகழ்) கூறினார் அருணகிரிநாதர். கந்தை அழித்தவன்—வசப்படுத்தினவன் கந்தன். அக்கந்து வடு நீங்கப்பெற்றுழி வள்ளியையும் கொடிநிலை என்னும் (தேயானை) தெய்வயானையையும் இருபுறமும் அணைத்துக் கொள்வன் கந்தன் என்க; ஆறு ஆதாரம் என்னும் ஆறு வாயல்களை

யுடைய—முகங்களையுடைய ஆறுமுகன் என்க; மாயையைச் சண்ணும்படியான முகத்தையுடைய சண்முகன் என்க. பாசுபதமாகி—மலம் விமலமாகி அமலமுதற்படி கண்டு எம்பெருமானுக்குப் பிள்ளையான மெய்யடியார் நிலைமையாதலால் "வடு நீங்கு சிறப்பின் முதலன" ஆகிய "கொடிநிலை கந்தழி வள்ளி" என்ற இம் மூன்றும் "கடவுள் வாழ்த்தொடு கண்ணியவரும்" என விதந்து கூறப்பட்டன என அறிதற்பாற்று. இதனால் மெய்யடியார் கடவுளர் போல வாழ்த்தப் படுதலின் உண்மை கூறப்பட்டது. மெய்யடியார் எல்லாம் இந் நிலைமை கைவரப் பெற்றவரே யாவர். "உறைபுகலியூரிலன்று வருவோனே"(திருப்புகழ்) எனவும் பிறவுமாக அருணகிரிநாதர் ஞானசம்பந்தப் பெருமானை முருகவேள் அவதாரம் எனப் போற்றிய தன் உண்மையும் உய்த்துணர்தற்பாலது.

பாசு பதமாகி—மல பரிபாகம் பெற்றுப் பிரளயாகலனாய் அமல முதற்படி கண்ட மெய்யடியானே சிவ மணமுடையவன்—முருகன்— மணங்கமழ் தெய்வத்துஇளநலமுடையவன் என்க. இவனே வேள்; சேய்; குருமூர்த்தி. வள்ளி தெய்வயானை காந்தன் என்க. இவன் வடிவமே புள்இருக்கும்வேளூர். இவனிடத்திற்றான் "புள்" புள் என்னும் வடு நீங்கிய கந்து—வேற்படை—எதிர்த்தவரை க்ஷணத்திற் கொல்லும் வச்சிரம் என்னும் வேலாயுதம்—ஞான வாள் உண்டு என்க. இவனே குறிஞ்சி நிலத்தெய்வம் — குறிஞ்சி வேந்தன். எந்த எந்தப் பக்குவம் பெறுதற்கு எந்த எந்தத் திணை இன்றியமையாததோ அந்த அந்தத் திணையாக அவ்வப்போது மாற்றி அடைய வேண்டியதை அடைந்துபடியேற்றம் பெறவேண்டும்.பாலை குறிஞ்சி மருதம் முல்லை நெய்தல் என்பன ஆரோகண மார்க்கம். ஆதலால் எந்தத் திணையையுடைய சரீரமாகிய பூமியும் மேற்கண்ட திணையை வரிசையாகப் பெற்று ஆரோகணம் பெறவேண்டும் என்பது எம்பெருமான் அருள் வாக்கு—வேத வாக்கியம் என்க. பாலையில் உற்பத்தி அமிர்தம். அவ் அமிழ்தம் விளைவேறிய பின் குறிஞ்சியால் உண்ண வேண்டும் என்ப.

"அன்பின் பெருமையும் அருளின் பெருமையும்
அம்பின் பெருமையும் அனைத்தும் குறிஞ்சியாம்."

என்பது ஆன்றோர் வாக்கு.

அறல் என்பது அப்பு—அன்பு எனப்பொருள் படும். அதைக் கண்ட பின் அதனால் ஆனது அறம். அறல்—அறம்—நித்தியத்துவம் எனப்படும். அறல் என்பது தண்ணீர் எனவும், உறல் என்பது பரிசம், வாயு எனவும் இருக்கு வேதம் கூறுகின்றது. காமம் என்பதன் இலக்கணம் கந்து. அதனை அழித்தவன்—அடிமை கொண்டவன் கந்தன். இவனே காமத்தை வென்றவன்—காமாரி. அமல முதற்படி தொட்டு அஃதாவது சிவன் முத்த நிலை ஆரம்ப காலந்தொட்டு அச்சிவன் முத்தநிலை பூரணமாகும்வரை விக்கின விநாயகப்பேறு முருகன் அவதாரம் முதலிய தெய்விக வடிவம் எல்லாம் முறையே அச்சிவன் முத்தனாகிய மெய்யடியான்பால் அமையப்பெறும் என்றால், அம்மம்ம! அம்மெய்யடியான் அருமை பெருமையை, பாவமே தடித்து உருவு கொண்ட மருளுடம்பினராகிய ஒன்றுக்கும் பற்றாத யாமா கூறவல்லம்? உண்மை இவ்வாறாகச் சவமணம் கமழும்மருளுடம்பினராகிய சிவர்களையே சிவன் முத்தர் எனவும், உடல் பிணவியல் அடையச் செத்துப் போவதுதான் முத்தி எனவும் ஒலமிடும் உலகமாக்கள் அறியாமையை என்னென்று கூறுவது ?

பாசு பதம் என்னும் அரிய பெரிய விரதத்தால்—தவத்தினால் உடலும் உயிரும் ஒழிவற ஒன்றுதலாகிய இருவினை ஒப்பு மலபரிபாகம் உளதாகும். அதன் மேல் சத்தி நிபாதம் என்னும் ஞான சத்தி அணு அணுவாகச் சரீரத்திற் பதிந்து ஆக்கமுறுதலால் அந்த ஞான சத்தி வடிவம் என்னும் ஓ வடிவம்—பிரணவ மந்திர சரீரம் பூரணப்படும். அருவுருவத் திருமேனியாகிய—சதாசிவ வடிவமாகிய இவ்வடிவமே அருவமாய் அருளாகிக் கரைந்து சிதாகாசப் பெரு வெளியில் மறைந்து சிவாங்கமாகும் என அறிதற்பாற்று. அரிய பெரிய பாசு பத விரதத்தின் முடிவான பேறு இதுவே என்க. இக்கட்டுரையில் விரிவுற விளக்கம் பெறாத அம்சங்கள் அமயம் நேரும் தோறும் விரித்து விளக்கப்படும்.

இது காறும் கூறியவைகளால் பாசு என்னும் மாசு—மலம் பரிபாகம் பெறுதலே—மேல் அமல மடைதற்கேற்றவாறு விமலம் பெறுதலே பாசு பதம் என்பதும், சற்குருநாதன் அருளால் பெறப்படும் இதற்குரிய அநுட்டானமே விரதங்களுள் தலையாய பாசு பத விரதம் என்பதும், "கந்தழி" என்னும் மணங்கமழ் தெய்வத்து இளநலம் பெற்றுச் சிவன் முத்தனாய்ச் சிதாகாசப் பெருவெளியில் மறைந்து உண்மை முத்தி அடைதலே இவ் விரதத்தின் முடிவான பேறு என்பதும் ஒருவாறு உணரத்தகும்.

சுபம்.

"வித்தகம்"
பழைய பிரதிகளின் கிரயம்

1-வது நெம்பர் தனிப்பிரதி விலை அணா 4.
2-வது ,, ,, ,, 4.
3-வது முதல் 20-வது வரையில் பிரதி ஒன்றுக்கு விலை அணா 2

வேண்டுவோர் தபால் முத்திரை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

வித்தகம் ஆபீஸ்.
புதுவை.

பெண்பாற் புலவர்கள்

யாழ்ப்பாணம் வேலணையூர்,

பண்டிதர் திரு கா. பொ. இரத்தினம்.

அவர்கள் எழுதியது

(பதிப்புரிமை கட்டுரை ஆசிரியருக்கே உரியது)

(36-ம் வாரத்தொடர்ச்சி)

சங்க கால ஔவையார்

இதனை அறிந்த அதியமான் அஞ்சி, இவர் முனிவிற்கு மிகவும் அஞ்சி, அருள்புரியுமாறு கெஞ்சி, தன் கொடைமன்றத்திற் கழைத்துச் சென்று வரிசைமிக்க பரிசில்களை அளவு கடப்ப அளித்து உபசரித்தான். உடனே அருந்தமிழ்த் தாயாரின் அகங்கனிந்தது. வாயினின்று அவன்றன் வன்மையைப் புலப்படுத்துஞ் செய்யுள் பிறந்தது. அச் செய்யுளினரும் பொருளை அறிந்து கொள்வதற்கு அதனை ஈண்டுத் தருதும்,

“ ஒருநாட் செல்லல மிருநாட் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ”
அணிபூண் அணிந்த யானை இயல்தேர்
அதியமான் பரிசில் பெறூஉங் கால
நீட்டினு நீட்டா தாயினும் யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுவது பொய்யாகாதே
அருந்தேமார்ந்த நெஞ்சம்
வருந்த வேண்டா வாழ்கவ வன்றுளே”

இவர் அதிகமானுடனுறைந்து வருநாளில் அவன் வீரத்தைச் செவ்வனே புகழ்ந்து செப்பிய செய்யுள் ஒன்று மிகவுஞ் சிறந்தது.

“களம்புகல் ஓம்புமின் தெவ்விர் போரெ
[திர்ந்து
எம்முளும் உளன் ஒரு பொருநன் வைகல்
எண்டேர் செய்யுந் தச்சன்
திங்கள் வலித்த காலன் னோனே”

என்பதே அச் செய்யுள்.

இதன் பொருள் :— ‘எமது வீரன் நாளொன்றுக்கு எட்டுத் தேர் செயும் தச்சன் இருநூற்று நாற்பது தேர் செயுங் காலமாகிய ஓர் மாதத்தில் செய்த ஒரு தேர்ச் சக்கரம் போன்றவன். ஆதலால் பகைவர்களே போர்க் களம் புகுவதை ஒழியுங்கள்’ என்பது.

அதிகமான் தமது அருஞ் செய்யுள்களை எல்லாம் மதித்துப் பாராட்டுதலைக் கண்ட அன்னையார் ஒரு முறை தம் அடக்கத்தையும் தம் செய்யுள்களின் வெளிறையும் காட்டப் பின் வரும் கருத்தமைந்த ஒரு பாடலைப் பாடினர்.

‘குழவிகளுடைய மழலைச் சொற்கள் இனிமை யின்றியும் பொருளொன்றின்றியும் இருப்பினும் அவை தந்தையர்க்கு இன்பத்தை யூட்டுவனவாகும். வெற்றியையுடைய அஞ்சியே! நீ விருப்பிக் கேட்டலால் என்புன் சொற்களும் உனக்கு அத் தன்மையனவாம்.’

இவ்வாறிருக்கு நாட்களில் ஒருநாள் பிணி மூப்புச் சாக்காட்டை ஒழிக்க வல்ல ஓர் இனிய அரிய நெல்லிக் கனியை அதிகமான் பெற்றான். அதன் பெருமையை அறிந்த அரசன் புரவலனாய தன் வாழ்விலும் புலவராகிய ஔவையார் வாழ்வு உலகத்துக்கு உறு பயனளிக்குமென்றெண்ணி அக்கனியின் ஆற்றலை அறிவியாது அதனை அவருக்குக் கொடுத்து உண்ணும்படி செய்தான்.

உண்டபின்னர்க் கனியின் விசேடத்தை உணர்ந்த ஔவையார் அதிகமானுடைய அருஞ் செயற்கு வியந்து அவனை நோக்கி

“வலம்படு வாய்வா ளேந்தி யொன்னார்
களம்படக் கடந்த கழல்தொடித்
[தடக்கை
ஆர்கலி நறவின் அதியர் கோமான்!
போரடு திருவிற் பொலந்தார் அஞ்சி!
பால்புரை பிறைநுதற் பொலிந்த
[சென்னி
நீலமணி மிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே; தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக்கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக்கீத் தனையே”

எனப்பாடி வாயார மனமார வாழ்த்தினர்.

“வித்தகம்.”
வருட சந்தா விவரம்
முன் பணம்
இந்தியா, பர்மா, சிலோன் ரூ. 3—0—0
மலாயா, சிங்கப்பூர், சைகோன் } ரூ. 4-0—0
வித்தக நிலையம்,
புதுச்சேரி.

Sandhanam Printing Works, Pondicherry. Le Gérant, R. Nagarattinam